# மயஸ்தீனியா (Myasthenia)

Association of Sri Lankan Neurologists

## மயஸ்தீனியா என்றால் என்ன?

- மயஸ்தீனியா என்பது உடலில் நரம்பு மற்றும் தசைகளிற்கிடையிலான இணைப்பைப் பாதித்து பலவீனம்/ இயலாமையை ஏற்படுத்தும் ஒரு நோயாகும். பொதுவாக அதீத நோய் எதிர்ப்புச் செயற்பாட்டினாலேயே இந்நிலை உருவாகின்றது.
- இந்நோய் உங்கள் கை, கால், கழுத்து, கண் மற்றும் சுவாசத்துக்குரிய தசைகளில் பாதிப்பை (குறைந்தளவு/ தீவிர) ஏற்படுத்தலாம்.
- இயலாமை/ பலவீன அறிகுறிகள் ஒருநாளின் பின் பாதியில் (மதியம்/ பின்னேரம்) கூடுதலாக உணரப்படலாம்.
- இது ஒரு நாட்பட்ட (நீண்ட கால) நோயாகும். நீண்ட கால சிகிச்சை தேவைப்படும்.
- தகுந்த சிகிச்சை இன்றேல் திடீர் சுவாசப் பிரச்சனை, விழுங்குவதில் சிரமம் மற்றும் இறப்பினையும் ஏற்படுத்தலாம்.

## சிகிச்சைகள்

- இந்நோய்க்காக, நோயை கட்டுப்படுத்துவதற்கும் அறிகுறிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் வேறுவேறான பல தகுந்த சிகிச்சை முறைகள் உள்ளன.
- நரம்பு-தசைச்சந்தியில் செய்திப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் சில மருந்துகள் இயலாமை அல்லது பலவீன அறிகுறிகளை உடனடியாகக் குறைக்க உதவும்.
- வாய் மூலமாகவோ/ ஊசி மருந்து மூலமாகவோ கொடுக்கப்படும் நோயெதிர்ப்புச் சக்தியைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் நீண்டகால நோக்கில் அதீத நோயெதிர்ப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.
- உங்கள் வைத்தியர் உங்கள் நோய்க்கான சரியான மருந்து தொகுதிகளைத் தெரிவு செய்து வழங்குவார்.
- வைத்திய அறிவுரையின்றி இதற்கான மருந்துகளை நிறுத்துவதோ அல்லது மருந்தின் அளவை மாற்றுவதோ கூடாது. குறித்த அளவு மருந்துகளை வாழ்நாள் முழுவதும் உபயோகிக்க வேண்டி வரலாம்.
- எனினும் இதனால் உங்களுக்குத் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்பு கூடுதலாக இருப்பதால், அம் மருந்துகளை உட்கொள்ளும்போது தொற்று நோய்களைத் தவிர்க்கும் வாழ்க்கை முறைகளை நீங்கள் கடைப்பிடித்தல் நன்று.
- வைத்தியப் பரிந்துரையின் பிரகாரம் தினமும் ஒழுங்காக மருந்துகளை உட்கொள்வதுடன் எப்பொழுதும் அவசரத் தேவைக்காகச் சிறிது கூடுதலான மருந்துகளைச் சேமித்து வைத்திருத்தல் நன்று.
- சில மயஸ்தீனியா நோயாளிகளின் நெஞ்சில் தைமோமா (Thymoma) எனும் வளர்ச்சி (கட்டி) இருக்கலாம். இதனை சத்திர சிகிச்சை மூலம் அகற்றுவது நோயைக் கட்டுப்படுத்த உதவும்.

Myasthenia Tamil V1 - Copyright © Association of Sri Lankan Neurologists (2025)

## நோய் தீவிரமடைதலைத் தவிர்த்தல்

- தொற்று நோய்கள், விபத்து, சத்திர சிகிச்சை, அதிக வெப்பம், சில நுண்ணுயிர்கொல்லி மருந்துகள், சில இரத்த அழுத்தம் மற்றும் இதயத்துக்குரிய மருந்துகள் மயஸ்தீனியா நிலையைத் தீவிரமாக்கலாம்.
- எனவே, எக்காரணத்திற்காவது வைத்திய உதவியை நாடும் போது உங்களுக்கு மயஸ்தீனியா நோய் இருப்பதனையும், அதற்காக நீங்கள் எடுக்கும் மருந்து விபரங்களையும் தெளிவாக அறிவிப்பது இவ்வாறான தீவிர நிலைகள் ஏற்படுவதைத் தவிர்க்க உதவும்.

## நோய் தீவிரமடைவதை எவ்வாறு இனங்காணலாம்?

- பின்வரும் இயலாமை/ பலவீன அறிகுறிகள் உருவாகும் பொழுது அல்லது கூடும் பொழுது உடனடியாக உங்கள் வைத்தியரிடம் தெரிவிக்கவும்.
    - கை, கால்களில் கூடுதலான இயலாமை/ பலவீனம்
    - பேச்சில் தடுமாற்றம்
    - மெல்லுவதில் (சப்புவதில்) மற்றும் விழுங்குவதில் சிரமம்
    - கழுத்து மற்றும் தலையை நேராக வைத்திருக்க இயலாமை

- பின்வரும் சுவாசப் (மூச்சுப்) பிரச்சினைகள் தோன்றினால் உடனடி வைத்திய உதவியை நாடவும்.
    - மூச்சு விடுவதில் சிரமம்
    - கிடையாகப் படுத்திருக்கும் பொழுது சுவாசிப்பதில்; சிரமம்.
    - விரைவாக ஆனால் ஆழமற்ற மூச்சு விடுதல் மற்றும் கதைக்கும் போது இடையிடையே மூச்சு வாங்குதல்
    - பலமற்ற இருமல்
    - விழுங்குவதில் மற்றும் சளியை வெளியேற்றுவதிy; சிரமம்.
    - ஒரே மூச்சில் 20 வரையிலான இலக்கங்களை உச்சரிக்க முடியாமை.

## மகப்பேறும் மயஸ்தீனியாவும்

- மயஸ்தீனியா நோயுடைய பெண்கள் உங்கள் மகப்பேறை வைத்தியரிடம் கலந்தாலோசித்து முன்கூட்டியே திட்டமிடுவது முக்கியமானதாகும்.
- உங்களுக்கும் குழந்தைக்கும் உகந்ததாக மருந்துகளையும் சிகிச்சை முறைகளையும் சிறிது மாற்றுவதும் அவசியமாகும்.
- பெரும்பாலான நோயாளிகள் பெரும்பாலான மயஸ்தீனியாவுக்குரிய மருந்துகளை மகப்பேற்றுக் காலத்திலும் தொடர்ந்து உட்கொள்ளலாம். எனினும், சில மருந்துகள் தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.
- உங்கள் மகப்பேற்று மற்றும் நரம்பியல் நிபுணர்களின் ஆலோசனைப்படி பிள்ளைப்பேறு காலம், முறை என்பவற்றை முன்கூட்டியே கலந்தாலோசிப்பது நன்று.

Myasthenia Tamil V1 - Copyright © Association of Sri Lankan Neurologists (2025)